பரிசு கிடைக்கும்.

பயணம்.

தினமலர் விவசாயமலர்

சூரியகாந்தி சாகுபடி தொழில் நுட்பங்கள்

சூரியகாந்தி எண்ணெய்தான் உலகிலேயே அதிக மக்கள் பயன்படுத்தக் கூடிய தாவர எண்ணெயாக உள்ளது. உலகில் எண்ணெய் உற்பத்தியில் 40 சதவீதம் சூரியகாந்தி பயிரில் இருந்து பெறப்படுகிறது. இந்தியாவைப் பொறுத்தவரை கர்நாடகா, மகாராஷ்டிரா, ஆந்திரா, தமிழ்நாடு ஆகிய மாநிலங்களில் சூரியகாந்தி பயிர் அதிகளவு சாகுபடி செய்யப்படுகிறது.

சூரியகாந்தி எண்ணெயில் கொழுப்பின் அளவு வடிகால் மிக குறைவாகவும் மற்றும் லினோலிக் அமிலம் (64 சதவீதம்) அதிகமாகவும் உள்ளதால், இதய நோயாளிகளுக்கு உகந்தது. மெக்சிகோ நாட்டை தாயகமாகக் கொண்ட சூரியகாந்தி பயிர், உலகம் முழுவதும் பல நாடுகளில் இப்போது சாகுபடி செய்யப்பட்டு வருகிறது.

சூரியகாந்தி எண்ணெய் சமையலுக்கு மட்டுமின்றி சோப்பு, அழகு சாதனப் பொருட்கள் தயாரிப்பிலும் மற்றும் குழந்தைகளுக்கு உணவுப் பொருட்கள் தயாரிப்பிலும் முக்கிய பங்காற்றுகிறது. சரியான தொழில்நுட்பத்தை கடைப்பிடித்தால் விவசாயிகள் சூரியகாந்தி பயிர் சாகுபடியில் அதிக வருமானம் பெறலாம்.

காலநிலை மற்றும் மண் அமைப்பு

சூரியகாந்தி பயிர், கடல் மட்டத்திலிருந்து 1,500-2,500 மீட்டர் உயரமுள்ள பகுதிகளில் நன்கு வளரக்கூடியது. சாகுபடி செய்ய சராசரி வெப்பநிலை 25 டிகிரி செல்சியஸ் இருக்க வேண்டும். பூக்கும் சமயத்தில் அதிக அளவு காற்றின் ஈரப்பதம் மற்றும் அதிக மழை மகசூலை பாதிக்கும். சூரியகாந்தி பயிர் நல்ல வடிகால் வசதியுள்ள செம்மண் மற்றும் கரிசல் நிலங்களில் நன்கு வளரும்.

அதிக மகசூல் தரக்கூடிய ரகங்கள்

கோ- 3 ரகமானது, அதிக மகசூல் தரக்கூடிய வீரிய ஒட்டு ரகம். இது, தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தால் வெளியிடப்பட்டது. 90-95 நாட்களில் அறுவடைக்கு தயாராகி விடும். இதேபோல, கோ- 3 வீரிய ஒட்டு ரகம் ஒரு எக்டேருக்கு சராசரியாக 2,214 கிலோ மகசூல் தரக்கூடியது. இதில் 42 சதவீதம் எண்ணெய்ச்சத்து உள்ளது. மேலும், அடிச்சாம்பல் நோய்க்கு மிதமான எதிர்ப்புத்தன்மை உடையது.

நிலம் தயாரித்தல்: சூரியகாந்தி பயிருக்கு ஏற்றவாறு 2-3 முறை உழவு செய்ய வேண்டும். கடைசி உழவின் போது ஏக்கருக்கு 5 டன் மக்கிய தொழு உரம் இடவேண்டும். நாட்டுக்கலப்பை கொண்டு பார்கள் மற்றும் பாத்திகளை தயார் செய்ய வேண்டும். வீரிய ஒட்டு ரகங்களுக்கு பார்களின் இடைவெளி 60 செ.மீ. என்ற அளவிலும், செடிகளுக்கான இடைவெளி 30 செ.மீ. என்ற அளவிலும் இருக்க வேண்டும். கடைசி உழவின் போது 12.5 கிலோ நுண்ணூட்டக் கலவையை 40 கிலோ மணலுடன் கலந்து நிலத்தில் இட வேண்டும்.

விதையளவும் விதை நேர்த்தியும்

ஒரு எக்டேருக்கு சாதாரண ரகத்தில் 7 கிலோவும், வீரிய ஒட்டு ரகமாக இருந்தால் 4 கிலோவும் போதுமானது. விதை நேர்த்தி செய்ய ஒரு கிலோ விதைக்கு 4 கிராம் டிரைக்கோடெர்மா விரிடியை கலந்து விதைக்க வேண்டும் அல்லது ஒரு எக்டேருக்கு தேவையான விதையை 600 கிராம் அசோஸ்பைரில்லம் மற்றும் 600 கிராம் பாஸ்போபாக்டீரியாவை ஆரிய வடிகஞ்சியுடன் கலந்து விதை நேர்த்தி செய்ய வேண்டும். இவ்வாறு நேர்த்தி செய்யப்பட்ட விதைகளை 15 நிமிடம் உலர்த்தி உடனடியாக விதைக்க வேண்டும். ஒரு குழிக்கு 2 விதைகள் என்ற அளவில் பாரின் பக்கவாட்டில் 3 சென்டிமீட்டர் ஆழத்தில் விதைக்க வேண்டும்.

நடவு செய்த 10வது நாளில் வளர்ச்சி இல்லாத செடிகளை களைத்து ஒரு குழிக்கு ஒரு தரமான செடி இருக்குமாறு பராமரிக்க வேண்டும். வீரிய ஒட்டு ரகங்களைப் பொறுத்தவரை வரிசைக்கு வரிசை 60 சென்டிமீட்டர் என்ற இடை வெளியிலும், செடிக்கு செடி 30 சென்டிமீட்டர் இடைவெளியிலும் இருக்குமாறு பராமரிக்க வேண்டும்.

சாதாரண ரகத்தைப் பொறுத்தவரை வரிசைக்கு வரிசை 45 சென்டிமீட்டர் என்ற இடைவெளியிலும், செடிக்கு செடி 30 செ.மீ. இடைவெளியிலும் இருக்கு மாறு பராமரிப்பு செய்ய வேண்டும். இதனால் பயிருக்கு தேவையான நீர், ஊட்டச்சத்து போன்றவை தரமாக கிடைத்து அதிக பலன் தரும்.

பொ. மகேஸ்வரன்
திட்ட ஒருங்கிணைப்பாளர் (பொ)
எம். அருண்ராஜன், சி. சபரிநாதன்
வேளாண் அறிவியல் மையம்
தேனி. போன்: 9677661410

ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மேலாண்மை

சூரியகாந்தி பயிருக்கு மண் பரிசோதனை அடிப்படையில் உரங்கள் இட வேண்டும். அப்படி செய்யாவிட்டால் பொதுவான உர அளவான 60 கிலோ தழைச்சத்து, 90 கிலோ மணிச்சத்து மற்றும் 60 கிலோ சாம்பல் சத்தை வீரிய ஒட்டு ரகத்துக்கும், 60 கிலோ தழைச்சத்து, 30 கிலோ மணிச்சத்து, 30 கிலோ சாம்பல் சத்தை சாதாரண ரகத்துக்கும் இடவேண்டும்.

உரங்களை 3 பாகமாக பிரித்து 50 சதவீதம் அடியுரமாகவும், 25 சதவீதம் 20--25வது நாட்களிலும், 25 சதவீதம் 45-50வது நாட்களிலும் இடவேண்டும். அதேபோல, மண் வளத்தைக் கூட்ட 2 கிலோ அசோஸ்பைரில்லம் மற்றும் 2 கிலோ பாஸ்போபாக்டீரியாவை 25 கிலோ தொழுஉரம் மற்றும் 25 கிலோ மணலுடன் கலந்து விதைப்பதற்கு முன் இடவேண்டும்.

நீர் மேலாண்மை

விதைத்தவுடன் ஒரு தண்ணீர் பாய்ச்ச வேண்டும். அதன்பிறகு 7வது நாள் உயிர்த்தண்ணீர் பாய்ச்ச வேண்டும். 3வது தண்ணீர் 20--25 நாளிலும், 4வது தண்ணீர் மொட்டு விடும் பருவத்திலும் பாய்ச்ச வேண்டும். பூ பிடிக்கும் தருணத்தில் 2 தண்ணீரும், விதை பிடிக்கும் தருணத்தில் 2 தண்ணீரும் பாய்ச்ச வேண்டும்.

களை மேலாண்மை: களைகளை சரியாக நீக்குவதற்கு விதைத்த 15வது நாளில் ஒரு களையும், 30வது நாளில் ஒரு களையும் எடுக்க வேண்டும். விதைப்பதற்கு முன் களை அதிகமாக இருந்த நிலமென்றால் ஒரு எக்டேருக்கு 2 லிட்டர் புளுகுளோராலின் அல்லது பெண்டிமெத்தலின் 500 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும். அதன்பிறகு 30-35வது நாட்களில் ஒரு கைக்களை எடுக்க வேண்டும்.

மணிகள் அதிகம் பிடிக்க: சூரியகாந்தி அயல் மகரந்தச் சேர்க்கை பயிராகும். அதிக மகசூல் எடுப்பதற்கு மகரந்தச் சேர்க்கை மிக முக்கியமானதாக உள்ளது. எனவே, மகரந்தச் சேர்க்கையை அதிகரிக்க ஒரு எக்டேருக்கு 5-10 தேன் பெட்டிகளை வைக்கலாம். பூக்கொண்டையின் வெளிவட்ட மஞ்சள் நிற பூக்கள் மலர ஆரம்பிக்கும் தருணத்தில் போரான் நுண்ணூட்டச் சத்தை ஒரு லிட்டர் தண்ணீருக்கு 2 கிராம் வீதம் கலந்து பூக்கொண்டைகள் நனையுமாறு தெளிக்க வேண்டும்.

மகரந்தச் சேர்க்கை ஏற்படும் நேரமான காலை 9 முதல் 11 மணிக்குள் மெல்லிய மஸ்லின் துணி கொண்டு ஒவ்வொரு பூக்கொண்டை மையம் தேய்க்க வேண்டும். அதேபோல, அருகருகே இருக்கக்கூடிய பூக்கொண்டையை ஒன்றோடொன்று முகம் சேர்த்து லேசாக தேய்த்து விட்டாலும் நல்ல பலன் தரும்.

பூச்சி மேலாண்மை: சூரியகாந்தி பயிரை தலைத்துளைப்பான், பீகார் கம்பளிப்புழு, புகையிலை புழு போன்ற பூச்சிகள் தாக்குகின்றன. அதனால் இவற்றை ஒருங்கிணைந்த முறையில் கட்டுப்படுத்தலாம்.

ஊடுபயிராக பச்சைப்பயிறு, உளுந்து, சோயாபீன் போன்றவற்றை பயிரிடலாம். மக்காச் சோளத்தை வரப்பு பயிராக நடவு செய்யலாம். இனக் கவர்ச்சிப் பொறிகள் ஒரு எக்டேருக்கு 5 என்ற வீதம் வைத்து கட்டுப்படுத்தலாம். 5 சதவீதம் வேப்ப எண்ணெய் அல்லது வேப்பங் கொட்டைச்சாறு ஆரம்ப கட்டத்தில் தெளித்து கட்டுப்படுத்தலாம். விளக்குப்பொறி வைத்து பூச்சிகளை கவர்ந்து அழிக்கலாம். பிவேரிய என்ற உயிர் பூச்சிக்கொல்லி மருந்தை தெளித்து புழுக்களை கட்டுப்படுத்தலாம்.

நோய் மேலாண்மை: ஆல்டர்நேரியா கருகல், அடிச்சாம்பல் நோய், அழுகல் நோய் போன்றவை மிக முக்கியமான நோய்கள் ஆகும். இவற்றை கட்டுப்படுத்த ஒருங்கிணைந்த நோய் மேலாண்மை முறைகளை கடைப்பிடிக்க வேண்டும்.

விதை நேர்த்தி செய்ய வேண்டும். மேன்கோசெப் மருந்தை 25 கிராம் / 10 லிட்டர் என்ற அளவில் கலந்து தெளித்தால் கருகல் நோய் கட்டுப்படும். பயிர் சுழற்சியை கடைப்பிடிக்க வேண்டும்.

அறுவடை: சூரியகாந்தி பூவின் பின்புறம் மஞ்சள் நிறமாக மாறும். முன்புறம் விதைகள் கடினமானதாகி கருப்பு நிறமாக மாறும். இவ்வாறு அறுவடைக்கு தயாரான சூரியகாந்தி பூக்களின் தலையை மட்டும் அறுவடை செய்து காயவைத்து பிறகு விதைகளை பிரித்து எடுக்க வேண்டும். விதைகளை 8.9 சதவீத ஈரப்பதம் வரும்வரை உலர்த்திய பிறகு சேமிக்க வேண்டும்.

சூரியகாந்தியை பறவைகளிடமிருந்து பாதுகாக்க: சூரியகாந்தி பூவில் விதைகள் உருவான உடனே கிளிகள் மற்றும் பறவைகள் வந்து விதைகளை உண்ண ஆரம்பித்து விடும். அதைக் கட்டுப்படுத்த ஒளி எழுப்பும் கருவிகளைக் கொண்டு ஒளி எழுப்பவேண்டும்.

மேலும், கலர் ரிப்பன்களை வாங்கி ஆங்காங்கே கட்டி விடுவதன் மூலம் பறவைகள் நடமாட்டத்தைக் குறைக்கலாம். ஒளி எதிரொலிக்கக்கூடிய வண்ண கண்ணாடி தாள் ஆங்காங்கே வைப்பதன் மூலம் கட்டுப்படுத்தலாம்.

அன்பார்ந்த விவசாயிகளே!

தினமலர் விவசாயமலர் இதழில் இடம்பெறும் கட்டுரைகள், செய்திகளில் செய்யப்படும் பரிந்துரைகள், ஆலோசனைகள் மீது உங்களுக்கு எழும் சந்தேகங்களை சம்பந்தப்பட்ட கட்டுரையாளரிடம் கேட்டு தெரிந்து கொள்ளவும்.

தினமலர் விவசாயமலர் இதழுக்கு கட்டுரைகள் அனுப்ப வேண்டிய இ - மெயில் முகவரி : agridmr@gmail.com.

இதழ் ஆலோசகர்: பேராசிரியர் குரு. சாமிநாதன். 94421 74230.

தினமலர் கிளை அலுவலகங்கள்: ☆ 72, காமாட்சியம்மன் கோவில் தெற்கு தெரு, செங்குந்தபுரம், **கரூர்-639 002.** போன்: (04324) 232638 ☆ 2381/2, மேல ராஜ வீதி, **புதுக்கோட்டை-622 001.** போன்: (04322) 222003 ☆ 1406/2, தெற்கு மெயின் தெரு, **தஞ்சாவூர்-613 009.** போன்: (04362) 230096, 232506 ☆ 118/64, உடப்பன்குளத் தெரு (இலுப்பையடி விநாயகர் கோவில் அருகில்), **கும்பகோணம்-612 001.** போன்: (0435) 2431575 ☆ 7 **A/8** ரூம் 10 ஏ.தி. காம்ப்ளக்ஸ், வி.ஆர்.பி. ரோடு, **திருவாரூர்-610 001.** போன்: (04366) 221222 ☆ 56, [illegible] காம்ப்ளக்ஸ் வெளிப்பாளையம், **நாகப்பட்டினம்-611 001.** போன்: (04365) 242420 ☆ 27/8, [illegible], **மயிலாடுதுறை-609 001.** போன்: (04364) 222148 ☆ [illegible] தெரு, **காரைக்கால்-609 602.** போன்: (04368) 223355.

DINAMALAR - National Tamil Daily. Edited and Printed by **Dr. R. RAMASUBBU** and Published by **RR. GOPALJEE** at No.25,28,116 & 116/1 Birds Road, Cantonment, Tiruchirappalli - 620 001 on behalf of Dinamalar (RF) at New Standard Press, Annexe, Old No.17/18, New No.25, Birds Road, Cantonment, Tiruchirappalli - 620 001. Ph: (0431) 2460271-73, Fax: (0431) 2415169 RNI No: 11853/66 Postal Reg. No.SSPOS/TRY/059/2021-2023